www.tamilarangam.net

# கொலைகாரன் முகுந்தன்
# கூட்டாளி வாசுதேவ



ச. அ. டேவிட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிவனேஸ்வரன் சகோதரி கடிதம்

மெட்ரூஸ்
10-9-1985

கொலைகளை அஞ்சாது செய்யும் துரோகி உமாமகேஸ்வரனே!

உன்னையே இறுதிவரை நம்பி உன்னைச் சந்திக்கவென வந்த சிவனேஸ்வரனைச் சுட்டுக் கொல்லக் கூட உனக்கு முடியாமல் போய் விட்டதா? இவ்வளவு சித்திரவதை செய் கின்ற உனது கூட்டத்திற்கும் உனக்கும், இராணுவத்திற்கும் என்ன வித்தியாசமடா? இவ்வளவிற்கும் எனது தம்பி சிவனேஸ்வரன் உனக்கு என்ன துரோகமடா செய்தவன். உங்களுக்கெல்லாம் ஏனடா தமிழீழம். சிவனேஸ்வரனைத் தான் கொன்றாய் அவனைச் சேர்ந்த சோதி ராஜா, வசந்தன் இராஜன் அவர்கள் உனக்கு என்னடா செய்தார்கள்? பாவி அவர்களை யென்றாலும் சித்திரவதை செய்யாமல் சுட்டுக் கொன்றிருக்கலாமேடா பாவி இவ்வளவு பழியும் உன்னைச் சும்மா விடாதடா! சும்மா விடாதடா!

துரோகியே! மூன்று வருடங்களாக தனது வீட்டிலேயே உண்ணக் கூட முடியாத நிலையில் வந்த உன்னை ஆதரித்து இராணுவத்தினருக்கு மட்டுமல்லாது உனது எதிரி பிரபாகரனுக்கும் பாதுகாத்து உன்னை இந்த நிலைக்கு ஆளாக்கிய குற்றத்திற்காகவா அந்தப் பிள்ளைக்கு ஒரு தோட்டா கூட உனக்கு செலவழிக்க முடியவில்லை. துரோகி உனக்கு இப்ப கொள்ளையடித்த பணமெல்லாம் வந்தவுடன் அந்தப் பிள்ளை செய்த நன்றிகளையெல்லாம் மறந்து விட்டியா? தட்டிக் கேட்பதற்கு மற்றவர்கள் பயப்படுவது போல் நாங்களும் பயப்படுவோம் என்று நினைத்தாயோ பாவி என்றைக்கோ ஒரு நாள் எல்லோரும் சாவது நியாயம் தானே!

www.tamilarangam.net


அதை உன் கையாலேயே என்னையும் சேர்த்து செய். அந்தப் பாவமும் உன்னைச் சேரட்டும். இதற்கெல்லாம் பயந்தவளல்ல நான். கொள்ளையடித்த பணமெல்லாம் இயக்கத்திற்கு என்று சொல்லி அடித்து, தமிழீழம் காப்பதாகக் கூறி, உனது பெயரில் விடுதியும், எஸ்ரேற்றும், ரெக்ஸ்ரைஸ்சும் வாங்கி விட்டால் நீ பெரியவன் என்று நினைத்து விட்டியா? பணம் வந்தவுடன் அவன் செய்த நன்றிகளையெல்லாம் மறந்து விட்டியேடா பாவி.

என் குடும்பத்தையே அழிக்கத் துணிந்த பாவியே. எனது அண்ணன் உனக்கு அண்ணன் போல் தானே இருந்தார். தனது சகோதரனைத் தேடி வந்த குற்றத்திற்காகவா நடுகடலில் தூக்கி வீசியெறிந்தாய் பாவி. 2வது பெண்ணின் வாழ்க்கையையும் அழித்து விதவையாக்கி விட்டியேடா?

அவன் இராணுவத்தினரால் சாக வேண்டுமென எண்ணி இலங்கைக்கு அனுப்பி வைத்தாய். அதிலும் அவன் தப்பி வந்து விட்டான். ஆனல் அவனது அத்தான் இராமராஜேஸ்வரன் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டார். பாவி அவனது சகோதரி இளம் வயதிலேயே விதவையாகி மூன்று பிள்ளைகளையும் வளர்க்க முடியாமல் திண்டாடுகிறுளே அதையாவது நீ உணர்ந்தியேடா பாவி இத்தனை உயிர்களையும் கொலை செய்த அரக்கனே! உனக்கும் சிங்கள இராணுவத்தினருக்கும் என்னடா வித்தியாசம். அவங்களோடு கூட உன்னை ஒப்பிட முடியாதடா பாவி! அவ்வளவு கீழ்தரமானவன் என்பதை இப்பதானடா நாங்களே உணருகிறோம். தமிழ் மக்கள் உணருவதற்கு அதிக காலம் செல்லாது என்பதையும் மறந்து விடாதேயடா பாவி.

எவ்வளவு தூரத்தில் இருந்து எனது சகோதரனை அடைத்து வைத்திருக்கிறாய் என அறிந்து வந்தோனை துரோகி அதற்கிடையில் கொலை செய்ததும் மட்டுமல்லாது என்னை சந்திக்கக் கூட முடியாது என்று சொல்லி விட்டியேடா

www.tamilarangam.net

பாவி எங்களை பிரிக்க உன்னால் முடியும். உனக்கே மனசாட்சி இடங்கொடுக்கவில்லையேடா பாவி. உன்னுடைய மனசாட்சி உன்னைக் கொன்றுகொண்டுதானடா இருக்கும். எல்லா மாடும் முட்டாது என்றே எண்ணாதே? இந்த மாடுகள் சும்மா விடாது என்பதை மட்டும் உனது மனதில் வைத்துக் கொள்ளடா பாவி.

நீதி கேட்டுப் போராடிய எனது தம்பிக்கு நீ உடனடியாக முடிவு கொடுத்துவிட்டாய். ஆனால் அவன் உயிர் உடல் தான் அழிந்ததே தவிர நீதி நிலைக்குமடா பாவி. அவனும் உன்னுடன் சேர்ந்த கொலை காரர்களான சங்கிலி என அழைக்கப்படும் கந்தசாமி வாமதேவன், வாசிதேவன் போல் கொலைகாரனாக மாறியிருந்தால் இப்ப பங்களா, கார், பணம் எல்லாவற்றிலும் மிதந்திருப்பான். கேவலம் உந்தப் பணத்திற்காக தன் நீதியை அவன் இழக்கவில்லையேடா அந்தப் பெருமையையே எங்களுக்கு (எங்கள் குடும்பத்திற்குத்) தேடித்தந்துவிட்டானடா. அதுவே போதும் எங்களுக்கு. உனது சுயநலமும், கபட நாடகமும் தற்பொழுது வெளி வந்து கொண்டிருப்பதை மறந்து விடாதே. உனது கபட நாடகம் நிலைப்பதற்கும் புகழுடன் சென்ற பிள்ளையின் பெயர் நிலைப்பதற்கும் கனகாலமில்லையடா.

துரோகியே ஏழு வருடங்களாக உன்னுடன் ஒரு கேப்பையில் உண்டு. ஒரு பாயில் படுத்த பிள்ளையை உன் கையாலேயே அடித்து, அடித்து சித்திரவதை செய்து கொன்றியே அந்தப் பிள்ளையையே அப்படிச் செய்த நீ தமிழீழம் கிடைத்தால் தமிழ் மக்களை சும்மா விடுவாயா! இதை ஒரு நாளும் அறிய மாட்டார்கள் என்ற எண்ணத்திலா அவன் சிங்கப்பூரில் லெபனானில் என்று கதை கட்டி விட்டாய்? அவனில்லையென்றால் உனது கழகத்தின் பெயரே கெட்டுவிடும் என்று உனக்கே தெரிந்துவிட்டதே அவ்வளவுமே போதும். சீக்கிரமே உனது முகமூடியைக் கிளித்தெரிய வாய்ப்புக் கொடுத்திருக்கிறியே அதற்கு நன்றி. உனது துவக்கிற்கு (துப்பாக்கி) பயந்தவளல்

www.tamilarangam.net


லடா நான் வீர பரம்பரையில் உதித்தவர்கள் தானடா நாங்கள்.

கோழையே! நீ உண்மையான ஒரு வீரனுக இருந்தால் தனிமையில் அவனுடன் துப்பாக்கி சமர் புரிந்திருக்கலாம் இல்லையா? உனக்கே அவனுடன் போர் புரியத் துணிவில்லை யடா. அப்படிப்பட்ட ஒரு வீரனை 10,15 பேர் சேர்ந்து தோளில் கை போட்டு கூட்டிக்கொண்டுபோய் கட்டிப் போட்டுத்தானடா அடித்தியா. இதை நினைக்கவே உனக்கு வெட்கமாக இல்லை யாடா. உன்னைப் பார்த்து சிரிக்கப் போகுதே இப்ப நீ சிரிக்கி ருய்? நாளை உலகம் உன்னைப்பார்த்துச் சிரிக்கப்போகுது. அப் பொழுதுதான் உனது துரோகச்செயல்களை எண்ணி எப்படி நாங்கள் எல்லோரையும் இழந்து துடிக்கின்ருேமோ அதே மாதிரித் துடித்து துடித்து சாகவேண்டும். இதுவரை நீ 286 (இருநூற்று எண்பத்தாறு) கொலைகள் செய்திருக்கிருய்· இனிமேலாவது கொலை வெறிபிடித்தவனே கொலைகளைச் செய்யாதே உனது மனைவியைப் போய் கேள் 10 மாதங்களும் எப்படி கஷ்டப்பட்டுப் பிள்ளையைப் பெற்ருள். என்பதை பெற்ற தாய்மாரைக் கண்கலங்க வைக்காதேயடா படுபாவி. உன்னைப் பெற்ற தாயிடம் உனது கொலைகளைச் சொல்லிப்பாருடா பாவி அவள் எப்படித் துடிப்பாள் என்று அப்பதான் நீ உணருவாய்.

உனது எதிரி

தமிழீழ மக்களே உங்களுக்கு ஒரு செய்தியைத் தரவிரும்பு கின்றேன்.

1) மானமுள்ள யாழ்பாணத்து தமிழ் பெண்கள் இவர்களை நம்பி வந்து பம்பாயில் உமாமகேஸ்வரனின் பெயரில் வாங்கப் பட்ட விடுதியில் விபச்சாரியாக மாற்றப்பட்டு அவஸ்தைப் படுகிருர்கள்.

2) பல இளைஞர்கள் போதை வஸ்து உமாமகேஸ்வரனின் கட்டாயத்தின் பேரில் கடத்தி சிறைச்சாலைகளில் அடைக்கப் பட்டுக் கிடக்கிருர்கள்.

www.tamilarangam.net


3) மக்களே இதுவரையில் நானறியக் கூடியதாக நடந்த கொலைகள் 286தான். அதற்கு மேலேயும் நடந்திருக்கலாம். தாய்மார்களே உங்கள்பிள்ளைகள் உயிருடன் இருக்கிறார்களா என்பதை தெண்டித்து அறியப் பார்க்கவும்.

தமிழ் மக்களே இவற்றையெல்லாம் நான் பகிரங்கமாக அறிவிப்பதற்குரிய காரணத்தை நீங்கள் அறியவேண்டாமா? எங்கள் குடும்பம் எல்லோரையும் இழந்து தவிப்பதைப்போல் இன்னொரு குடும்பமும் அதைப்போல் தள்ளப்படக் கூடாதே என்பதற்காகவே இதனை நான் பகிரங்கப்படுத்தினேன். இக்கடிதம் எழுதும் நானும் நாளை கடத்தப்படலாம், கொலை செய்யப்படலாம் என்பதையும் உங்களுக்கு சொல்லி வைக்க விரும்புகிறேன்.

இப்படிக்கு

சகோதரர்களை இழந்து துடிக்கும் சகோதரி

பிரதிகள்

1. இந்தியப் பிரதம மந்திரி
2. தமிழ்நாட்டு முதலமைச்சர்
3. உள் நாட்டு விவகார அமைச்சர்
4. திரு எஸ்.டி. சோமசுந்தரம்
5. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்
6. ஈழ தேச விடுதலை முன்னனி
7. தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணி
8. இலங்கைத் தொழிலாளர் கழகம்
9. தமிழ் இன்போமோன் செனிரர்
10. புரடோக்
11. தீப்பொறி ஆசிரியர்
12. ஈழ நாடு ஆசிரியர்
13. ஸ்ரீலங்கா வேக்குறூப்

ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலண்ட், U.S.A.

www.tamilarangam.net


14. தெற்கு ஆசியா பியூரோ
15. தமிழீழ விடுதலை அணி
16. லண்டன் முரசு

10.9.85-ல் வசந்தனைக் கடத்திச் சென்ற சதிக்கும்பல் அவரின் நன்நடத்தையில் களங்கம் ஏற்படுத்துவது போன்றத் தகவலைத் தினமணிக்குக் கொடுத்துள்ளனர். இதை தினமணியும் தீர ஆராயமல் வெளிப்படுத்தியிருக்கின்றனர். இப்பொய்ச் செய்தியை மறுத்து உண்மை விளக்கத்தைத் தினமணி ஆசிரியருக்கு 22.9.85ல் அனுப்பியிருந்தேன். இன்னும் தினமணி என் செய்தியை வெளியிடவில்லை. தினமணி ஆசிரியரின் கீழ்த்தர பண்பைத் தமிழ் மக்களுக்கு அறிவிக்க என் கடிதத்தைப் பிரசுரித்து வெளியிடுகிறேன்.

ச. அ. டேவிட்

தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழக சமத்தலைவர் வாசுதேவ மிகவும் கட்டுக்கடங்காத பாலியல் விவகாரங்களில் பகிரங்கமாய் இனங்கண்டு கொள்ளப்பட்டவர். இவருடைய முறையற்ற பாலியல் செயல்கள் மறைமுகமாக 'புதியதோர் உலகம்' என்ற நூலிலும் பகிரங்கமாகத் தீப்பொறியிலும் வெளியாகி உள்ளன. தினமணி செய்தித் தாளில் வசந்தனைப் பற்றி அபாண்டமான குற்றச்சாட்டுகளுக்கு வாசுதேவ சூத்திரதாரியாயிருந்திருக்கலாம்.

ச. அ. டேவிட்

ஆசிரியர்,

தினமணி,

சென்னை,

அன்புடையீர்,

வசந்தனைக் கடத்திய விடயத்தில் நீங்கள் எடுக்கும் ஊக்கத்துக்கு என் நன்றி. 22.9.85ல் நீங்கள் கொடுத்த செய்தியை அடுத்து சில தகவல்களைக் கீழ்தருகிறேன். இதை உடனடியாக வெளியிடுவீர்கள் என நம்புகிறேன்.

1976 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண மேயர் துரையப்பா வழக்கில் வசந்தன் முக்கிய எதிரியாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தார் என்று எழுதியிருக்கிறீர்கள். இவர் ஆருவது கடைசி எதிரியாக குற்றம் சாட்டப்பட்டு குற்றம் இன்றி வெளியேறினார்.

பிளட் அமைப்பைச் சேர்ந்த எட்டுப் பேரைக் கோடம்பாக்கம் பொலீசார் விசாரித்ததும் இது உண்மையில்லை என்று அவர்கள் மறுத்ததும் எழுதப்பட்டிருக்கிறது. பிளட்டைச் சேர்ந்தவர்கள் திருமங்கலம் பொலீசாரால் விசாரிக்கப் பட்டனர்.

வசந்தன் காணமல் போன புகார் ஒரு பெண்ணால் செய்யப்பட்டதென்றும் அவர் இன்னுமொரு பெண்ணுடன் தொடர்பிருந்ததால் தானகவே தலைமறைவாகினர் என்றும் பிளட் அமைப்பைச் சேர்ந்தவர் கூறினர் என்றும் எழுதியிருக்கிறீர்கள்.

இதைப் பற்றிய விரிவான விளக்கத்தைத் தருகிறேன்.

வசந்தன் கடத்தப்பட்டதைப் பொலீசுக்குப் புகார் செய்தது என்னுடன் வசிக்கும் வ. கனகசபாபதி.

10-9-85ல் மகாலிங்கபுரம், தமிழ் தகவல் நிலையத்தில் கே.கே. நகர் 221 பிள்ளையார் வீதியில் வசிக்கும் ராதாதேவி என்ற தமிழ் ஈழப் பெண் என்னைச் சந்தித்தார். அவர் என் மூலமே வசந்தனை முதல் முறையாக அறிமுகம் செய்து கொண்டார். இந்தப் பெண் வசந்தனிடம், எம்முடன் காந்தீயத்தில் இருந்து தன் பிளட்டில் இருந்த யூலியும் இன்னும் மூன்று பெண்களும் பிளட் தஞ்சாவூர் முகாமிலிருந்து வெளிவந்து திருச்சினுப்பள்ளியில் ஒழிந்து இருக்கிறார்கள் என்றும், வசந்தன் அவர்களை சந்திக்க வேண்டும் என்றும் கூறினள். இதை வசந்தன் என்னிடம் அறிவித்ததும் நான் அவரை மிகவும்

www.tamilarangam.net

1976 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண மேயர் துரையப்பா வழக்கில் வசந்தன் முக்கிய எதிரியாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தார் என்று எழுதியிருக்கிறீர்கள். இவர் ஆருவது கடைசி எதிரியாக குற்றம் சாட்டப்பட்டு குற்றம் இன்றி வெளியேறினார்.

பிளட் அமைப்பைச் சேர்ந்த எட்டுப் பேரைக் கோடம்பாக்கம் பொலீசார் விசாரித்ததும் இது உண்மையில்லை என்று அவர்கள் மறுத்ததும் எழுதப்பட்டிருக்கிறது. பிளட்டைச் சேர்ந்தவர்கள் திருமங்கலம் பொலீசாரால் விசாரிக்கப்பட்டனர்.

வசந்தன் காணமல் போன புகார் ஒரு பெண்ணுல் செய்யப்பட்டதென்றும் அவர் இன்னுமொரு பெண்ணுடன் தொடர்பிருந்ததால் தாஞகவே தலைமறைவாகினுர் என்றும் பிளட் அமைப்பைச் சேர்ந்தவர் கூறினுர் என்றும் எழுதியிருக்கிறீர்கள்.

இதைப் பற்றிய விரிவான விளக்கத்தைத் தருகிறேன்.

வசந்தன் கடத்தப்பட்டதைப் பொலீசுக்குப் புகார் செய்தது என்னுடன் வசிக்கும் வ. கனகசபாபதி.

10-9-85ல் மகாலிங்கபுரம், தமிழ் தகவல் நிலையத்தில் கே.கே. நகர் 221 பிள்ளையார் வீதியில் வசிக்கும் ராதாதேவி என்ற தமிழ் ஈழப் பெண் என்னைச் சந்தித்தார். அவர் என் மூலமே வசந்தனை முதல் முறையாக அறிமுகம் செய்து கொண்டார். இந்தப் பெண் வசந்தனிடம், எம்முடன் சாந்தீயத்தில் இருந்து தன் பிளட்டில் இருந்த யூலியும் இன்னும் மூன்று பெண்களும் பிளட் தஞ்சாவூர் முகாமிலிருந்து வெளிவந்து திருச்சிஞப்பள்ளியில் ஒழிந்து இருக்கிறார்கள் என்றும், வசந்தன் அவர்களை சந்திக்க வேண்டும் என்றும் கூறினுள். இதை வசந்தன் என்னிடம் அறிவித்ததும் நான் அவரை மிகவும்

www.tamilarangam.net

ஜாக்கிரதையாய் இருக்கும்படி எச்சரித்தேன். வேண்டுமாயின் எம்முடன் சேர்ந்து வேலை செய்யும் ஆனந்தன் வீட்டில் சந்தித்துப் பேசும்படியும் சொன்னேன். இந்த இளம் பெண் பல தடவை ஆனந்தன் வீட்டுக்குச் சென்று வசந்தனை தன்னுடன் தனிமையாய் அழைத்துச் செல்ல மிகவும் முயற்சி எடுத்தார். ஆனால் தோல்வி கண்டார்.

இந்தப் பெண் வந்ததும், பிளட் யூலியைப் பற்றிப் பேசியதும், இன்று பிளட் அமைப்பைச் சேர்ந்தவர் வசந்தன் பெண்ணுக்கு அகப்படாமல் தலைமறைவானார் என்று பேட்டி கொடுப்பதும், வசந்தனைப் பிளட் கடத்திச் சென்றனர் என்பதை தெட்டத் தெளிவாகக் காட்டுகிறது.

17-9-85ல் பிளட்டுடன் சேர்ந்த மூவர் வானில் வந்து கே.கே. நகர் வீட்டில் வசந்தனைக் காணவேண்டும் என்று விசாரித்துச் சென்றிருக்கின்றனர்.

மேலும் என்னை கடத்தியவர்கள், என்னைத் தவறாகக் கடத்தியதாகவும் வசந்தனைக் கடத்த வந்திருந்ததாகவும் கூறியதை என் துண்டுப் பிரசுரத்தில் 6-8-85இல் வெளியிட்டேன்.

ஏராளமான தமிழ் ஈழப் போராளிகள் பிளட்டால் சித்திர வதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டுவிட்டனர்.

இனியாவது தமிழக, இந்திய அரசு பிளட் தலைவர் முகுந்தனையும் அவரது கொலைக் கும்பலையும் கைது செய்து எங்கள் உயிர்களைக் காப்பாற்றுமா?

இப்படிக்கு

(ஒப்பம்—ச. அ. டேவிட்)

ச.அ. டேவிட்

23-9-85

தலைவர், காந்தியம்.

www.tamilarangam.net

வசந்தன் என்று அழைக்கப்படும் சந்ததியர் தமிழ் ஈழ இளைஞர்களின் அபூர்வ சக்தியும் ஆற்றலும் உள்ளவர். சிறந்த சிந்தனையாளர். மார்க்சீய லெனினிய அடிப்படை மனிதாபிமானத்தில் ஊறித் திளைத்தவர். நான் காந்தீய வாதத்தில் உளவறியவன் அப்படியிருந்தும் என்னுடன் கடந்த 10 ஆண்டுகளாக அன்பாகவும் பண்பாகவும் பழகியவர். அவருடைய தோழமையை இழந்து இன்று நான் கலங்கி நிற்கிறேன்.

முகுந்தன் பிரபாகரனுக்கும், சிங்கள இராணுவத்திற்கும் பயந்து ஒழிந்திருந்த நாட்களில் வசந்தன் தன் உயிரையும் மதியாது முகுந்தனைக் காத்து காப்பாற்றியவர். முகுந்தன் தலைமறைவாகி தமிழகத்தில் ஒழிந்திருக்கத் தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தை ஈழத்த்தின் மூலை முடுக்களெல்லாம் எடுத்து சென்றவர் வசந்தன். முகுந்தன் வசந்தனுக்கும் மற்றும் தமிழ் ஈழப் போராளிகளுக்கும் செய்த சதிச் செயலுக்கு தமிழ் இனம் பழிவாங்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அய்யாப்பிள்ளை அமிர்தலிங்கமும், தமிழக மத்திய இந்திய அரசும் முகுந்தனைத் தலைவராய் மதித்து ஆதரவளிப்பதன் விபரீதத்தை எதிர்காலம் நிரூபிக்கும்.

ச. அ. டேவிட்